**ஏப்ரல் – 17**

# TNPSC துளிகள்

- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள இந்தியாவின் ஏழாவது பெரிய பஞ்சாப் பால் கூட்டுறவு நிறுவனமான மில்க்ஃபெட் என்பது, 'வெர்கா' எனும் அதன் பால் உற்பத்தி தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்புகளை மிக நன்கு பிரபலப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் அதன் விற்பனையை அதிகரிப்பதற்கும் 'வீரா' எனும் உருவச் சின்னத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தியாவால் வடிவமைக்கப்பட்ட பொது விமானத்தின் புதுப்பிக்கப்பட்ட வடிவமான சரஸ் Mk2 ஆனது, 2027 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தனது சோதனை ஓட்டத்திற்கு உட்படுத்தப்படத் தயாராகி வருகிறது.
- வங்க தேசத்திலுள்ள இந்திய உயர் ஆணையரகத்தின் கலாச்சாரப் பிரிவான இந்திரா காந்தி கலாச்சார மையம் ஆனது, டாக்காவில் உள்ள இந்தியக் கலாச்சார மையத்தில் இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான சபையின் (ICCR) 75வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.
- மத்தியப் பிரதேச மாநில அரசு ஆனது, சாகர் மாவட்டத்தில் ஒரு புதிய வனவிலங்குச் சரணாலயத்தினை டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் அபயரான் எனும் பெயரில் அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள் கூட்டமைப்பின் (ISSF) 2025 ஆம் ஆண்டு உலகக் கோப்பையின் முதல் கட்டத்தில், சீனாவிற்கு அடுத்தபடியாக 4 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் உட்பட மொத்தம் 8 பதக்கங்களுடன் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- 2035 ஆம் ஆண்டு FIFA மகளிர் உலகக் கோப்பை போட்டியினை நடத்த ஐக்கியப் பேரரசு தயாராக உள்ளது.
- அமெரிக்காவின் அலாஸ்காவின் ஆங்கரேஜ் பகுதி அருகே அமைந்துள்ள, கடந்த 5000 ஆண்டுகளாக வெடிக்காத ஒரு எரிமலை ஆன, மவுண்ட் ஸ்பர்ர் சமீபத்தில் மிகவும் தீவிரமாக வெடித்தது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உயர் கல்வியில் தமிழக அரசுப் பள்ளி மாணாக்கர்


- கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேரும் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் எண்ணிக்கை சுமார் 30% அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் கல்வியாண்டில், 12 ஆம் வகுப்பு வாரியத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களில் குறைந்தது 74% பேர் கல்லூரிகளில் சேர்கின்றனர்.
- 2021-22 ஆம் ஆண்டில், இந்த எண்ணிக்கை வெறும் 45% மட்டுமேயாகும்.
- மாநில அரசு ஆனது புதுமைப் பெண் திட்டத்தினை அறிமுகப்படுத்திய பிறகு, 2022-23 ஆம் ஆண்டில் இது 69% ஆக உயர்ந்தது.
- இந்த முன்னெடுப்பு ஆனது, உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் அரசுப் பள்ளியில் பயின்ற மாணவிகளுக்கு 1,000 ரூபாய் மாதாந்திர ஊக்கத்தொகையை வழங்குகிறது.
- 2024 ஆம் ஆண்டில் மாணவர்களுக்காக தமிழ்ப் புதல்வன் என்ற இதே போன்ற ஒரு திட்டத்தை மாநில அரசு அறிமுகப்படுத்தியது.

- 2022-23 ஆம் ஆண்டில், அரசுப் பள்ளிகளில் இருந்து 12 ஆம் வகுப்புத் தேர்வுகளை எழுதிய 3,97,809 மாணாக்கர்களில் 2,72,744 பேர் கல்லூரியில் சேர்ந்தனர்.
- 2023-24 ஆம் ஆண்டில், சுமார் 3,34,723 மாணாக்கர்களில் 2,47,744 பேர் கல்லூரிகளில் சேர்ந்தனர்.
- இதில் தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்த மாணாக்கரும் அடங்குவர்.
- தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கனவே 47% என்ற அதிகபட்ச மொத்தச் சேர்க்கை விகிதம் (GER) பதிவாகியுள்ளது என்பதோடு இது இந்தியாவின் பெரிய மாநிலங்களில் மிக அதிக பட்சமாகும்.
- மொத்தத்தில், 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் சுமார் 7.6 லட்சம் மாணாக்கர்கள் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளைத் எழுதினர், அவர்களில் சுமார் 45% பேர் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.




# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் குழந்தைப்பருவ காசநோய் பாதிப்புகள் 2024





- கடந்த ஐந்து ஆண்டுகளில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் அறிவிக்கப்பட்ட

குழந்தைப் பருவ காசநோய் (TB) பாதிப்புகளின் எண்ணிக்கை 38 சதவீதம் அதிகரித்து உள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் 102,090 ஆக இருந்த பாதிப்புகள் ஆனது 2024 ஆம் ஆண்டில் 141,182 ஆக உயர்ந்துள்ளன.
- உலக சுகாதார அமைப்பின் ஒரு கூற்றுப்படி, குழந்தைப்பருவ காசநோய் ஆனது 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் காணப்படும் இந்த நோய்ப் பாதிப்பினை குறிக்கிறது.
- இந்தியாவின் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் (NTEP) ஆனது, இந்தியாவின் ஒட்டு மொத்த காசநோய் பாதிப்பில் சுமார் 10 முதல் 12 சதவீதம் வரையில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.
- இந்த எண்ணிக்கையானது, ஆண்டிற்குச் சுமார் 300,000 முதல் 350,000 வரையிலானப் பாதிப்புகளுக்குச் சமமாகும்.

### ஒருங்கிணைந்த மின்தேவை திட்டமிடல் மாதிரி 2025




- இந்தியா ஒரு புதிய ஒருங்கிணைந்த மின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் சேமிப்பு விரிவாக்கத் திட்டமிடல் மாதிரியை வெளியிட்டுள்ளது.
- இந்த மாதிரியானது, மின்னாற்றல் துறையில் உள்ள வளங்களின் பூர்த்தித் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாதிரியானது அனைத்து மாநிலங்கள் மற்றும் மின்பரிமாற்ற மற்றும் விநியோக நிறுவனங்களுக்கும் (DISCOMS) இலவசமாக வழங்கப்படும்.

## சர்வதேசச் செய்திகள்

### 2024 ஆம் ஆண்டிற்கான WMO அமைப்பினால் கைவிடப் பட்டப் புயல்களின் பெயர்கள்

- 2024 ஆம் ஆண்டில் அவற்றினால் பதிவான உயிரிழப்பு மற்றும் அழிவு காரணமாக பெரில், ஹெலீன் மற்றும் மில்டன் ஆகிய புயல்களின் பெயர்கள் ஆனது, அதன் அட்லாண்டிக் பகுதிக்கான பெயர்ப் பட்டியலில் இருந்தும், ஜான் என்ற பெயரானது கிழக்கு பசிபிக் பகுதிக்கான பெயர்ப் பட்டியலில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளன.
- அட்லாண்டிக் பகுதியில் ஏற்படும் வருடாந்திரப் புயல் உருவாக்கப் பருவமானது, ஜூன் முதல் நவம்பர் வரை நீடிக்கும்.
- கரீபியன் பகுதியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியதுடன் பெரில் கடந்த ஆண்டு பதிவான 5 ஆம் வகை புயல் ஆகும்.
- ஹெலீன் மற்றும் மில்டன் அமெரிக்காவில் பேரழிவு சேதத்தை ஏற்படுத்தியப் புயல்கள் ஆகும் என்பதோடு மேலும் ஜான் ஆனது மெக்சிகன் மாநிலமான குரேரோவில் கொடிய

வெள்ளத்தை ஏற்படுத்தியப் புயலாகும்.

❖ 2005 ஆம் ஆண்டு புயல் உருவாக்கப் பருவத்தில், ஒரு அட்லாண்டிக் பருவப் புயல்கள் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டப் புயல்களுக்கான பெயர்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும்.


❖ 2000 ஆம் ஆண்டுகளில் மிக அதிகபட்சமாக பத்தாண்டுகளில் நீக்கப் பட்டப் பெயர்கள் 24 ஆகும் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டுகளில் 16 பெயர்கள் நீக்கப்பட்டன.

**Atlantic basin hurricane names**
**2025**

| | | |
|---|---|---|
| Andrea | Humberto | Olga |
| Barry | Imelda | Pablo |
| Chantal | Jerry | Rebekah |
| Dexter | Karen | Sebastien |
| Erin | Lorenzo | Tanya |
| Fernand | Melissa | Van |
| Gabrielle | Nestor | Wendy |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாய்க் கிரகத்தினை ஒத்தச் சூழல்களில் வாழும் கடற்பாசிகள்




❖ முதல் முறையாக, சில கடற்பாசி இனங்கள் செவ்வாய்க் கிரகத்தைப் போன்ற சில சூழல்களில் உயிர்வாழ முடியும் என்பதை அறிவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.

❖ இதில் வளர்சிதை மாற்ற ரீதியாக செயல்பாட்டில் இருப்பதோடு, அயனியாக்கக் கதிர் வீச்சுக்கு உட்படுதலும் அடங்கும்.

❖ இந்த ஆய்வு ஆனது அவற்றின் மாறுபட்டப் பண்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட டிப்ளோஸ்கிஸ்டெஸ் மஸ்கோரம் மற்றும் செட்ராரியா அகுலேட்டா ஆகிய இரண்டு வகையான கடற்பாசிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தியது.

❖ இவை இரண்டும் செவ்வாய்க் கிரகத்தினை ஒத்தச் சூழல்களைக் கொண்ட மாதிரி

அறையில் ஐந்து மணி நேர ஆய்வில் உட்படுத்தப்பட்டன என்பதோடு இது செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலம், அழுத்தம், வெப்பநிலை மாற்றங்கள் மற்றும் கதிர்வீச்சைப் பிரதிபலிக்கும் வகையில் உள்ளது.

## சன்பேர்ட் - அணுக்கரு இணைவு மூலம் இயங்கும் ஏவுகலம்

- பல்சர் ஃபியூஷன் என்ற பிரிட்டன் நாட்டு புத்தொழில் நிறுவனமானது, சன்பேர்ட் எனப் படும் அணுக்கரு இணைவு மூலம் இயங்கும் ஏவுகலத்தினை உருவாக்கி வருகிறது.
- அணுக்கரு இணைவு மூலம் இயங்கும் இந்த ஏவுகலம் ஆனது, விண்கலங்கள் மணிக்கு சுமார் 805,000 கிலோ மீட்டர் வேகத்தை அடைய உதவும் என்பதோடு இது பார்க்கர் சூரிய ஆய்வுக் கலத்தினை விட மிக வேகமானதாகும்.
- மணிக்கு 692,000 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும் பார்க்கர் கலமானது, இதுவரை கட்டமைக்கப்பட்ட வேகமான விண்கலமாகும்.
- அணுக்கரு இணைவு மூலம் இயங்கும் இந்த ஏவுகலமானது செயல்பாட்டுக்கு வந்தால், செவ்வாய்க் கிரகத்தை அடைய ஆகும் காலத்தினைப் பாதியாகவும், புளூட்டோவை அடையத் தேவையான நேரத்தை நான்கு ஆண்டுகளாகவும் குறைக்கும்.





## ஐந்தாம் வகை நீரிழிவு நோய்

- மிகவும் குறைவாகவே அறியப்பட்ட ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்பான நீரிழிவு நோயானது ஐந்தாம் வகை நீரிழிவு நோய் என வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இளம் மற்றும் மெலிந்த உடல் கொண்ட இளம் பருவத்தினரிடையே அடிக்கடி ஏற்படும் இந்தப் பாதிப்பு ஆனது, முதலில் 1955 ஆம் ஆண்டில் ஜமைக்காவில் பதிவாகியது, பின்னர் இது J-வகை நீரிழிவு என வரையறுக்கப்பட்டது.
- 1960 ஆம் ஆண்டுகளில், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்பிரிக்காவின் துணை-சஹாராவின் சில பகுதிகளில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள மக்களில் இந்தப் பாதிப்பு பதிவாகியது.
- 1985 ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பானது இந்தப் பாதிப்பு நிலையை நீரிழிவு நோயின் ஒரு மிக தனித்துவமான வடிவமாக அங்கீகரித்தது ஆனாலும் அது 1999 ஆம் ஆண்டில் அந்த வகையை நீக்கியது.
- ஐந்தாம் வகை நீரிழிவு நோய் என்பது ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்பான நீரிழிவு நோயாகும் என்பதோடு இது மிகப் பொதுவாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் வாழும் மெலிந்த மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள பதின்ம

வயதினர் மற்றும் இளைஞர்களைப் பாதிக்கிறது.

- முதல் வகை நீரிழிவு நோயாளிகளைப் போல அல்லாமல் இன்சுலின் ஊசிகள் இந்த நோயாளிகளுக்குப் பயனளிக்காது.
- இது உலகளவில் முக்கியமாக ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் 20 முதல் 25 மில்லியன் மக்களைப் பாதிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## யுனெஸ்கோ அமைப்பின் BIOCOM திட்டம்

BIOCOM

- இந்த திட்டம் உள்நாட்டு இளையோர்களுக்குத் தொழில்துறைச் சார்ந்தத் திறன்களை வழங்குவதற்காக மடகாஸ்கரில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது மிகவும் நிலையான நீடித்த வாழ்வாதாரத்தை வழங்குவதோடு, மொன்டாக்னே டெஸ் ஃபிரான்சாய்ஸ் காப்பகம் போன்ற வனச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மீதான

அழுத்தத்தைக் குறைக்கிறது.

- BIOCOM என்பது ஒருங்கிணைந்தச் சமூக மேம்பாட்டிற்கான பல்லுயிர்ப் பெருக்க வளங் காப்பு மற்றும் நிலையான இயற்கை வள மேலாண்மையைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டத்திற்காக யுனெஸ்கோ அமைப்பானது தென்கொரிய நாட்டின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (KOICA) கூட்டு சேர்ந்துள்ளது.

## புதிய கல் வண்டு இனங்கள்

- வட கிழக்கு இந்தியப் பகுதிகளில் ஆறு புதிய வண்டு இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆறு இனங்களும் மலடெரா, நியோசெரிகா மற்றும் செரிகா ஆகிய வகைகளைச் சேர்ந்த முன்னர் அறியப்படாத இனங்கள் ஆகும்.
- புதிதாக கண்டறியப்பட்ட அந்த ஆறு இனங்கள்:
    - மலடேரா சாம்பையென்சிஸ் — மிசோரம்,
    - நியோசெரிகா சுராசந்த்புரென்சிஸ் — மணிப்பூர்,
    - மலடேரா பாரசிங்கா — இந்தியச் சதுப்பு நில மானின் பெயரால் பெயரிடப்பட்டது,
    - மலடேரா லம்லேன்சிஸ் — அருணாச்சலப் பிரதேசம்,
    - செரிகா சுபன்சிரியென்சிஸ் — அருணாச்சலப் பிரதேசம்,
    - மலடேரா ஓணம் — கேரளா




## கம்பளி தோல் கொண்ட பறக்கும் அணில்

- இமாச்சலப் பிரதேசத்தின் லஹுவுல் மற்றும் ஸ்பிட்டி மாவட்டத்தில் உள்ள மியார் என்ற பள்ளத்தாக்கில் மிகவும் அரிதான கம்பளி தோல் கொண்ட பறக்கும் அணிலின் முதல் புகைப்பட ஆதாரம் கைப்பற்றப்பட்டுள்ளது.
- இந்த அணில் (யூபெட்டாரஸ் சினெரியஸ்) ஆனது வடமேற்கு இமயமலையில் மட்டுமே காணப்படுகிறது.
- சுமார் 70 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு 1994 ஆம் ஆண்டில் மீண்டும் இது


கண்டுபிடிக்கப் படும் வரை இது அழிந்து விட்டதாக நீண்ட காலமாக நம்பப்பட்டது.

- இது மிகப்பெரிய பறக்கும் அணில் வகையிலான, மிகவும் நீளமான மற்றும் அனைத்து சறுக்கிப் பறக்கும் பாலூட்டிகளிலும் கனமான ஒரு அணில் வகையாகும்.
- IUCN செந்நிற பட்டியலில் இது அருகி வரும் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## தெலுங்கானா மாநில அரசின் SC உள்/துணை வகைப்பாடு




- தெலுங்கானா மாநில அரசானது, 2025 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SC) இட ஒதுக்கீட்டுச் சட்டத்தினை அதிகாரப்பூர்வமாகச் செயல்படுத்தியுள்ளது.
- அந்த அரசாணையின்படி, தெலுங்கானாவில் உள்ள 56 பட்டியலிடப்பட்டச் சாதியினர் சமூகங்கள் ஆனது தற்போது மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- இது பட்டியலிடப்பட்டச் சாதியினரின் உள்/துணைக் குழுக்களிடையே சலுகைகளின் சமமான பரவலை உறுதி செய்யும்.
- இந்த வகைப்பாடானது கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் பிரதிநிதித்துவத்தில் இடஒதுக்கீடு குறித்த எதிர்காலக் கொள்கைகளுக்கு வழிகாட்டும் என்று எதிர்பார்க்கப்

படுகிறது.

- கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு (2024), தெலுங்கானா மாநிலமானது பட்டியலிடப்பட்டச் சாதியினர் குறித்த ஒரு உள் ஒதுக்கீட்டினை வகைப்படுத்திய முதல் மாநிலமாக மாறியுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★